සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 08 முதலாம் தவணைப் பரீட்சை - 2019 33 T

வரலாறு

சுட்டெண் ..................................................... நேரம் 2 மணித்தியாலம்

## பகுதி I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **01 முதல் 05 வரையான வினாக்களுக்குரிய விடையினை அடைப்பினுள் இருந்து தெரிந்து எழுதுக.**

01. எமது நாட்டில் உலர்வலயத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக .......................................... கட்டப்பட்டது
(நதிகள் / பெருங்குளங்கள் / ஆழமான கிணறுகள்)

02. பண்டுகாபய மன்னனின் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட அபய வாவி .......................................... எனும் பெயரால் அழைக்கப்பட்டது.
(திஸா / ஹுருளு / பசவக் குளம்)

03. மனித சமூகம் ஆரம்பகாலங்களில் இருந்து தற்காலம் வரை வந்த நெடும் பயணத்தின் போது முதலில்

.......................................... கலைப்பொருட்களைச் செய்து வந்தனர்.
( களிமண்ணினால் / பலகையினால் / இரும்பினால்)

04. மகிந்த தேரரின் வருகையினால் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நெருங்கிய உறவு

காரணமாக .......................................... அறிவு இந்நாட்டுக்குக் கிடைக்கப் பெற்றது.
(இரும்புத் தொழிநட்பம் / கட்டட நிர்மாணம் / களிமண் தொழிநுட்பம்)

05. பொலன்னறுவைக் காலத்தில் இந்துமதச் செல்வாக்கு காரணமாக சந்திரவட்டக்கல்லில் ............................ நீக்கப்பட்டது.
(எருது / ஒட்டகம் / சிங்கம்)

- **இல. 06 முதல் 10 வரையுள்ள வினாக்ககளில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையெனின் (✗) எனவும் அடைப்புக்குறிக்குள் இடுக.**

06. பெருங்குளங்களை முதன் முதலில் கட்டிய மன்னன் வசப மன்னனாவான். ( )

07. மல்வத்து ஓயாவை மறித்துக் கட்டப்பட்ட நீர்த்தேக்கம் எனும் அணைக்கட்டு நிரந்தரமான அணைக்கட்டாகும். ( )

08. தாதுசேன மன்னன் எலஹரக் கால்வாயை கட்டினான். ( )

09. அநுராதபுர இராச்சியத்தின் முற்பாதியில் இன்றைய அளவை விடப் பெரிய அளவிலான செங்கற்கள் பயன்படுத்தப்பட்டன. ( )

10. சிலை மனைகளை நிர்மாணிக்கும் புராதன சம்பிரதாயம் கந்தகுடி எனப்பட்டது. ( )

- **இல. 11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள விடைகளுள் மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.**

11. மகாசேன மன்னனால் கட்டப்பட்ட மகாகணதாரா வாவியின் பழைய பெயர் யாது?
1. ஜல்லூர வாவி 2. காணுவாவி 3. மானிக் வாவி 4. மனிஹிர வாவி

12. மிகச் சிறப்பு வாய்ந்த கலாவாவியைக் கட்டிய மன்னன் யார்?
1. வசப மன்னன் 2. மகாசேன மன்னன்
3. மகா பராக்கிரமபாகு மன்னன் 4. தாதுசேன மன்னன்

13. அநுராதபுர அபயகிரி தாதுகோபத்தின் மீது பொழியும் மழைநீர் எங்கு ஒன்று சேரும்?
1. உள் முற்றத்தில் 2. நீர் பீலிகளில் 3. மணல் குழிகளில் 4. பொய்கைக்கு




kalvi.lk

14. எமது நாட்டில் முதன் முதலாக நந்தவனம் ஒன்றை அமைத்த மன்னன் யார்?
   1. தாதுசேன மன்னன்
   2. 1ம் அக்ரபோதி மன்னன்
   3. மூத்தசிவ மன்னன்
   4. வசப மன்னன்

15. ஆரம்ப காலத்தில் இருந்தே இலங்கையின் சித்திரக்கலையில் முழுமையான சித்திரங்களை எங்கு காணலாம்?
   1. பொலன்னறுவையில்
   2. அநுராதபுரத்தில்
   3. சித்தலபவ்வதயில்
   4. சீகிரியாவில்

- **இல. 16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் உருக்களைப் பயன்படுத்துக. இவ்வுருக்களின் பெயர்களை இடைவெளியில் எழுதுக.**

16. 


..............................................................

17. 

..............................................................

18. 

..............................................................

19. 

..............................................................

20. 

..............................................................

(2x20=40 புள்ளிகள்)

* * * * *



kalvi.lk

## பகுதி II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. அ) பின்வரும் A, B, C, D எனும் பகுதிகளுக்குப் பொருத்தமான விடைகளை இடைவெளியில் எழுதுக.

A எலஹரக்கால்வாய் சம்பந்தமாக “இலங்கையின் புராதன நீர்ப்பாசனம்” எனும் அபூர்வ நூலை எழுதியவர்.

B மகாசேன மன்னன் மின்னேரியாக் குளத்திற்கு நீரைப் பெற்றுக் கொள்ள வெட்டப்பட்ட கால்வாய்

C 163 பெருங்குளங்களைக் கட்டிய மன்னன்.


D காலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு எந்த இராச்சியக் காலத்தில் நிகழ்ந்தது?

(பு. 04)

ஆ) i. இப்படத்தில் காட்டப்பட்டுள்ளது யாது?

ii. இது எங்கு அமைந்துள்ளது?

iii. இது அமைக்கப்பட்டதற்கான இரண்டு காரணங்களைத் தருக.



(பு. 04)

இ) i. இவ்வுருவில் காணப்படுவது யாது?

ii. இது எக்காலத்திற்குரியது?

iii. இதனை எங்கு காணலாம்?

iv. இச்சித்திரத்தில் காணக்கூடிய நிறங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.



(பு. 04)

ஈ) i. இந்த யோதக்கால்வாயுடன் தொடர்புடைய வாவியைக் குறிப்பிடுக?

ii. இதனை நிர்மாணித்த மன்னன் யார்?

iii. இது எக்குளத்திலிருந்து எக்குளத்திற்கு நீர் கொண்டு செல்லப்பட்டது?

iv. இதன் நீளம் எத்தனை மைல்கள் ஆகம்?



(பு. 04)

02. i. முற்கால இலங்கையர் நீரியல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்திய சந்தர்ப்பங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (பு. 03)

ii. பின்வரும் குளக்கூறுகளின் பயன்கள் ஒன்று வீதம் தருக.

A - கலிங்கல்

B - கலிங்கல் தொட்டி

C - அலைதாங்கி

D - வெளிவான் கதவு (பு. 03)

iii. பெருங்குளங்களைக் கட்டும் போது புராதன மக்கள் எதிர்நோக்கிய சவால்கள் 4 தருக. (பு. 04)

03. i. பல்வேறுபட்ட காலகட்டங்களில் கால்வாய்களை அமைக்கத் தேவை ஊற்பட்டமைக்கான மூன்று காரணிகளைக் குறிப்பிடுக. (பு. 03)



kalvi.lk

ii. நீண்ட கால்வாய்களை அமைக்கும் போது புராதன் மக்கள் எதிர்நோக்கிய சவால்கள் 4 தருக. (பு. 04)

iii. புராதன இலங்கையில் பொய்கைகள் அமைக்கப்பட்டமைக்கான காரணிகள் குறிப்பிடுக. (பு. 04)

04. i. களிமண் தொழிநுட்பம் வளர்ச்சியடைந்தவுடன் பொருட்களை அழகுபடுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் 3 தருக. (பு. 03)

ii. நீர்ப்பூங்காவின் சிறப்பம்சங்கள் 4 தருக. (பு. 04)

iii. மட்பாண்ட உற்பத்தியின் 4 படிமுறைகளைக் குறிப்பிடுக. (பு. 04)

05. i. உலோகக் கைத்தொழிலுடன் தொடர்புடைய பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| நிகழ்கால பெயர் | முற்கால பெயர் |
|---|---|
| 1. கொல்லர் | ........................................................ |
| 2. செம்புக்கம்மாளர் | ........................................................ |
| 3. தகரக்கம்மாளர் | ........................................................ |

(பு. 03)

ii. பின்வரும் அட்டவணையிலுள்ள இடைவெளிகளை நிரப்புக.

| தூபி | நிர்மானித்த அரசன் |
|---|---|
| தூபாராம | 1. .................................................. |
| 2. ................................ | துட்டகைமுனு |
| அபயகிரி | 3. .................................................. |
| 4. ................................ | மகாசேன மன்னன் |
| தெமல மகா சாய | 5. .................................................. |
| 6. ................................ | நிஸங்கமல்ல மன்னன் |

(பு. 03)

06. அ) i. இவ்வுருவில் காணப்படும் நிர்மாணிப்பு யாது?
ii. இது எந்த யுகத்திற்குரியது?
iii. இந்நிர்மாணிப்பைத் தரிசித்தல் பிரபல்யமடையக் காரணமானது, எக்கருத்துக்கள் பரவிச்சென்றதைத் தொடர்ந்து ஆகும்? (பு. 03)



ஆ) பின்வரும் கூற்றுக்கள் உலோகப் பாவனையின் வேகம் அதிகரிக்கப்பட்டமையை எடுத்துக் காட்டும் கூற்றுக்கள் 4 இனை மட்டும் எடுத்து எழுதுக.

* விவசாயத் தொழில் வளர்ச்சியுற்றமை.
* நகரமயமாதல் அதிகரித்தமை
* பல்வேறு அலங்காரப் பொருட்களின் உற்பத்தி
* இந்தியாவின் தொழிநுட்ப முறைகள் நாட்டினுள் வேகமாகப் பரவியமை.
* ஓட்டுத்தொழில் சம்பந்தமான உற்பத்தி நாட்டினுள் பரவியமை.



kalvi.lk

* கற்குகைளகில் செதுக்கல் வேலைப்பாடு அதிகரித்தல்.
* கட்டிட வர்த்தகத்துறை வளர்ச்சியுற்றமை.

(பு. 04)


இ) பின்வரும் A, B, C, D பதங்களுக்குப் பொருத்தமானவற்றை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

A. கெடிகே மரபுக்குரிய நிர்மாணமாகும். ....................................................................
B. சமயம் சார்பற்ற கட்டிடமாகும். ....................................................................
C. புராதன கால வைத்தியசாலை ....................................................................
D. அநுராதபுரக்கால நிற்கும் சிலையாகும். ....................................................................

(கல்விகாரை, போதிசத்துவர் சிலை, அரச மாளிகை, ஆலாஹனா பிரிவேனா, அவுக்கண, திவங்க சிலை மனை)

(பு. 04)

07. பின்வரும் குறுக்கெழுத்துச் சட்டத்தை பூரணப்படுத்துக.




<u>மேலிருந்து கீழ்</u>

1. இது கட்டிடத்தினுள் நுழைகின்ற வாயிலின் முன்னால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
2. சமயம் சார்பற்ற கட்டிடமொன்று.
3. புத்தராகப் பிறப்பதற்கு முன்னைய பிறப்பை இவ்வாறு அழைப்பர்.
4. குளமொன்றின் அக்காலு இரண்டு வகைகளில் காணப்படும்.
5. இதனை தேவநம்பிய திஸ்ஸ மன்னனால் நிர்மாணிக்கப்பட்டது.

<u>இடமிருந்து வலம்</u>

6. தொழுவில இலைமனை இம்மரபுக்குட்பட்ட கட்டடமாகும்.
7. இக்காலத்திலேயே இலங்கையில் அதிகமான சமயக்கட்டடங்கள் கட்டப்பட்டன.
8. வெள்ளரச மரத்தின் பாதுகாப்பிற்கு இது கட்டப்பட்டது.
9. இம்மன்னனது காலத்திலேயே பெரிய குளங்கள் கட்டப்பட்டது.
10. நிற்கும் சிலைகளில் ஒன்றாகும்.
11. இம்மன்னன் பத்மஸ்வர எனும் பெயரில் ஒரு பூங்காவை அமைத்தார்.

(பு. 11)



kalvi.lk

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**முதலாம் தவணைப் பரீட்சை - 2019**
**தரம் 08 - வரலாறு**
**விடைப்பத்திரம்**

## பகுதி I

| வினா இல. | | விடை | வினா இல. | | விடை |
|---|---|---|---|---|---|
| 1. | | பெரிய குளங்கள் | 2. | | பசவக்குளம் |
| 3. | | களிமண் | 4. | | கட்டடக்கலை |
| 5. | | எருது | 6. | | சரி |
| 7. | | சரி | 8. | | பிழை |
| 9. | | சரி | 10. | | சரி |
| 11. | | காணுவாவி | 12. | | தாதுசேனமன்னன் |
| 13. | | உள்முற்றத்தில் | 14. | | மூத்தசிவ |
| 15. | | சீகிரியா | 16. | | கலிங்கல் தொட்டி |
| 17. | | தாமரைப் பொய்கை | 18. | | 2ம் இலக்க சிவன் கோயில் |
| 19. | | சந்திரவட்டக்கல் | 20. | | சீகிரியா நீர்ப்பூங்கா |

## பகுதி II

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | அ) | | A | R. L. புரொகியர் | |
| | | | B | மல்வத்து ஓயா | |
| | | | C | மகாபராக்கிரம பாகு | |
| | | | D | பொலன்னறுவை | |
| | ஆ) | i | | குட்டம்பொய்கை | |
| | | ii | | அநுராதபுரம் | |
| | | iii | | பிக்குகளின் நீர்த்தேவைக்கு, அலங்காரத்திற்கு, சுற்றாடலை குளிர்ச்சியாக பேணுவதற்கு. | |
| | இ) | i | | சீகிரியா குகை ஓவியம் | |
| | | ii | | அநுராதபுரக்காலம் | |
| | | iii | | சீகிரியா | |
| | | iv | | மஞ்சள், சிவப்பு, நீலம், சாம்பல் | |
| | ஈ) | i | | கலாவாவி, திசா வாவி | |
| | | ii | | தாதுசேன மன்னன் | |
| | | iii | | கலாவாவியிலிருந்து அநுராதபுர திஸாவாவிக்கு | |
| | | iv | | 54 மைல் | |
| 02. | | i | | குளம் கட்ட, கால்வாய் வெட்ட, அணைகட்ட, பொய்கை அமைக்க | |
| | | ii | A | குளத்து நீரை கால்வாய்க்கு அனுப்ப உதவும். | |
| | | | B | குளத்து நீரின் அமுக்கத்தைக் கட்டுப்படுத்தி கால்வாய்க்கு நீரை வழங்கும். | |
| | | | C | குளக்கட்டு அரிபடாமல் குளக்கட்டு உட்புறத்தே போடப்பட்டுள்ள கருங்கல் படை | |
| | | | D | குளத்தின் மேலதிக நீரை வெளியேற்ற | |
| | | iii | | நீர்ததேக்கமொன்றை அமைக்கும் போது நதியின் மிகப் பொருத்தமான இடம் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும், தொழிலாளர்களைப் பெற்றுக் கொள்வது மண்ணைச் சேகரிக்க வேண்டும், உணவு அறிப்பது. | |



kalvi.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 03. | | i | | குளங்களிலிருந்தும் நீர்த்தேக்கங்களிலிருந்தும் விளைநிலங்களுக்கு நீரைக் கொண்டு செல்ல<br>நீர்த்தேக்கத்திலிருந்து குளத்துக்கு அல்லது<br>குளத்தொகுதிக்கு நீர் கொண்டு செல்ல<br>குளத்திலிருந்து மற்றுமொரு குளத்திற்கு நீர் கொண்டு செல்ல. | |
| | | ii | | கால்வாய் ஆரம்பம் முதல் முடியும் வரையில் புவியின் சாய்வு பற்றி சரியான அளவைத் தெரிந்து கொள்ள வேண்டும்.<br>சிலத்தை அகழ்தல், கால்வாயின் அகலம், ஆழம் என்பவற்றுக்குப் பொருத்தமாக கையாள்தல்.<br>மென்மையான மண்படை காணப்படும் இடங்களில் கிடையாகக் கற்களைப் பரப்பி அது அரிப்புக்குள்ளாவதைத் தடுத்தல். | |
| | | iii | | நீர்ப்பயன்பாட்டிற்கு<br>மழைநீரை முறையாக சேமிப்பதற்கு<br>அழகுக்கு<br>சூழலைக் குளிர்ச்சியாக வைப்பதற்கு | |
| 04. | | i | | வர்ணம் தீட்டுதல்<br>உருவங்கள் வரைதல்<br>கரை அலங்காரங்கள் செய்து<br>அழகுபடுத்தல். | |
| | | ii | | சூழலுக்கு பொருந்தும் வகையில் பூங்கா திட்டமிடப்பட்டிருத்தல்<br>வீதித்தொகுதியொன்று பூங்காவினுள் நிர்மாணிக்கப்பட்டிருத்தல்<br>கால்வாய், பொய்கை எ பூம்புனல் என்பவற்றை அமைத்து அழகுபடுத்தல் | |
| | | iii | | பொருத்தமான களிமண்ணை தெரிவு செய்தல்.<br>அதனைப் பதப்படுத்திக் கொள்ளல்.<br>களிமண்ணை உருண்டையாக வனைதல், சில்லில் வைத்து அதன் உருவத்தை வடிவமைத்துக் கொள்ளல்.<br>பின்னர் அலங்காரம் இட்டு துளையில் போட்டு சுட்டெடுத்தல். | |
| 05. | அ) | i | | கபர | |
| | | ii | | தம்பர | |
| | | iii | | தோபஷ | |
| | ஆ) | i | | தேவநம்பிய திஸ்ஸ மன்னன் | |
| | | ii | | ருவன்வெலிசாயா / மிரிசவெட்டிய | |
| | | iii | | வலகம்பாகு மன்னன் | |
| | | iv | | ஜேதவனராமய | |
| | | v | | மகா பராக்கிரம பாகு | |
| | | vi | | ரன்கொத் விகாரை | |
| | இ) | i | | பலாங்கொடை சமனலவெவ பிரதேசம் | |
| | | ii | | சீகிரியாவில் அவகொலவெவ தெஹிகஹஅல கந்த பிரதேசம் | |
| 06. | அ) | i | | போதிசத்துவ சிலை | |
| | | ii | | அநுராதபுரம் | |
| | | iii | | மகாயானக்கருத்துக்கள் | |
| | ஆ) | | | விவசாயத்தொழில் வளர்ச்சியுற்றமை<br>நகரமயமாதல் அதிகரித்தமை<br>கட்டடிடவாக்கத்துறை அதிகரித்தமை<br>இந்தியாவின் தொழிநுட்பத்தின் முறைக் நாட்டினுள் வேகமாகப் பரவியமை | |



kalvi.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இ) | i<br>ii<br>iii<br>iv | | திவங்க சிலை மனை<br>அரசமாளிகை<br>ஆலாஹனா பிரிவெனா<br>அவுக்கண | |
| 07. | | | <br>1<br>2.<br>3<br>4<br>5<br><br><br>6.<br>7<br>8<br>9<br>10<br>11 | மேலிருந்து கீழ்<br>சந்தரவட்டக்கல்<br>அரண்மணை<br>போதிசத்துவர்<br>வான்கதவு<br>திஸாவாவி<br><br>இடமிருந்து வலம்<br>கந்தகுடி<br>அநுராதபுரக்காலம்<br><br><br>அவுக்கண<br>குட்டகண்ண திஸ்ஸ | |

* * * * *



kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL MEDIUM

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

# GRADE 8

**ADMISSION**

FREE

திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- Spoken English Classes.
- Sinhala Reading and Writing Classes.
- Map Marking Classes

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page